# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**வா.சா.1-)**

**அசல் வழக்கு எண். 126/2019**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.நிமலன் கிறிஸ்டோபர் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை பெயர் | ஜார்ஜ் மனோகரன் | கிராமம் | சூலூர் |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 09.01.2026 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

**1.** நான் மதுக்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்ட சார் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவிடும்போது நான் உடன் இருந்தேன். வழக்கு சொத்தின் புல எண்.153 ஆகும். புல எண் சம்பந்தப்பட்ட வரைபடம் கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை அளந்த பின்னிட்டு நீதிமன்ற ஆணையருக்கு நான் வரைபடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் எனது வரைபடம் உள்ளது.

2. நான் கொடுத்த வரைபடமானது தெளிவாக படித்து புரிய முடியவில்லை என்றால் அளவுகள் தெரிகிறது. புல எண்.153 காலையின் வடபுறமாக புல எண்.152 உள்ளது. மேல்புறமாக புல எண்.156 காலை உள்ளது. மேற்படி மூன்று காலைகளும் சந்திக்கும் இடத்தில் ஒரு சர்வே கல் இருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் பார்வையிடும்போது சர்வே கல் இருந்ததா என்றால், ரோடு அகலப்படுத்தும்போது புல எண்.153 ல் வடமேற்கு மூலையில் நிலம் எடுத்துள்ளனர், அதனால் அந்த இடத்தில் சர்வே கல் அங்கு இல்லை.

3. பிரதிவாதியின் நிலம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என எனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் அனுபவ அடிப்படையிலும், ஆவணத்தின் அடிப்படையிலும் இரண்டு வரைபடங்கள் தாக்கல் செய்துள்ளேன். மனுதாரர் ஆவணத்தின் அடிப்படையில் வழங்கியதாக சொல்லும் வரைபடம் எனது அனுமானத்தின் அடிப்படையில் வழங்கியுள்ளேன் என்றால் இல்லை. வாரண்டில் சொத்து விவரத்தில் சொல்லியுள்ள பரப்பின், அடிப்படையில் நான் வரைபடம் வழங்கியுள்ளேன். மேற்படி ஆவணத்தின் அடிப்படையிலான வரைபடமானது உண்மையான சொத்தின் சுவாதீனத்தை பிரதிபலிக்கவில்லை என்றால் தவறாகும்.

4. பத்திரத்தில் உள்ள பரப்பு குறித்தும், அனுபவத்தில் உள்ள பரப்பு குறித்தும் நீதிமன்ற ஆணையர் வரைபடம் கோரினார், அதன் அடிப்படையில் நான் வரைபடம் வழங்கினேன். நீதிமன்ற உத்தரவில், பரப்பு குறித்து வரைபடம் தயாரிக்க சொல்லி உத்தரவு இல்லை என்றால் அது சரியாக நினைவில்லை. நீதிமன்ற உத்தரவை மீறி தாக்கல் செய்துள்ள வரைபடம் செல்லாது என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவின் படி தான் வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. புல எண்.153 காலையில் நெடுஞ்சாலைத்துறையில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அதற்காக புதிய உட்பிரிவு எண்கள் வழங்கப்பட்டுள்ளது. அந்த புதிய உட்பிரிவுகளை நான் வழங்கியுள்ள இரண்டு வரைபடங்களில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் மட்டும் அளந்து உட்பிரிவுகளை குறிப்பிட்டுள்ளேன். நெடுஞ்சாலைத்துறை உட்பிரிவுகள் வழக்குக்கு சம்பந்தப்பட்டது அல்ல.

5. நெடுஞ்சாலைத்துறை உட்பிரிவுகள் வழக்குக்கு சம்பந்தப்பட்டது அல்ல என சொல்வது தவறு என்றால் சரியல்ல. நெடுஞ்சாலைத்துறை 1ம் பிரதிவாதியின் சொத்துக்களை கையகப்படுத்தியுள்ளது என்றால் சரிதான். எவ்வளவு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்தின் பரப்பு எவ்வளவு என்று ஆணையர் என்னிடம் சொல்லவில்லை. நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில் பிரதிவாதியின் சொத்தாக காட்டப்பட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. வேலி அமைத்துள்ள வரை அளந்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளது.

6. நெடுஞ்சாலைத்துறையால் ஆர்ஜீதம் செய்யப்பட்ட சொத்துக்களின் பரப்பளவை கழித்துவிட்டு மனுதாரர் / பிரதிவாதியின் சொத்தினை ஆவணத்தின் படி அளந்திருக்க வேண்டும் என்றால் மனுதாரரின் எல்லை எது என்று ஊர்ஜீதம் செய்யப்படவில்லை. நெடுஞ்சாலையானது வடபுறமாக கிழமேலாக உள்ளது, மனுதாரரின் வரப்பு எது என்று ஊர்ஜீதம் செய்யப்படவில்லை, எனவே நெடுஞ்சாலைத்துறை எவ்வளவு நிலம் ஆர்ஜீதம் செய்துள்ளது என என்னால் கண்டறிய இயலவில்லை, நிலையான வரப்பு இருந்தால் தான் அதை கண்டறிய இயலும்.

7. நீதிமன்ற ஆணையர் சொத்தை அளந்த போது மேற்படி விவரம் குறித்து சொன்னேனா என்றால் சரியாக நினைவில்லை. நான் தவறான விவரங்களின் அடிப்படையில் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. புல எண்.152, 153, 156 மூன்று காலைகளும் சந்திக்கும் இடத்தை நான் அனுமான அடிப்படையில் தான் தீர்மானித்தேன் என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் சொத்தை அளந்தபோது நான் அந்த இடத்தை குறிப்பிட்டு காட்டினேன். நீதிமன்ற ஆணையரின் மாதிரி வரைபடத்தில், மூன்று காலைகளும் சந்திக்கும் சர்வே கல்லை அடையாளம் காட்ட முடியுமா என்றால் அடையாள காட்ட இயலவில்லை.

8. நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில், அனுபவப்படி தாக்கல் செய்த வரைபடத்தில், நெடுஞ்சாலைத்துறை ஆர்ஜீதம் செய்த பூமிகளை, வாதி, பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ளதாக காட்டியுள்ளேனா என்றால் இல்லை. வாதி, பிரதிவாதியின் பூமியை ஒட்டி வடபுறமாக நெடுஞ்சாலைத்துறை ஆர்ஜீதம் செய்த பூமி எவ்வளவு என்று என்னால் கணக்கிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியும், ஆனால் ஏற்கனவே கணக்கிட்டு வருவாய் ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது, அதை பார்த்து தான் சொல்ல முடியும். மேற்படி வருவாய் ஆவணங்களின் பதிவுகளை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

9. அனுபவப்படியான வரைபடத்தில், மேற்கு எல்லையில் 4 சென்ட் தனியாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி 4 சென்ட் நிலத்தின் உரிமையாளர் புல எண்.156 சொத்தின் உரிமையாளர் ஆவார். புல எண்.156 காலையின் உரிமையாளர் கம்பி வேலி அமைத்துள்ளார் என்றால் அவர் அமைத்துள்ளாரா என்று தெரியாது, ஆனால்

கம்பிவேலி உள்ளது. மேற்படி 4 சென்ட் நிலமானது 1ம் பிரதிவாதி அர்ஜீணனின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். புல எண்.156 ல் மேற்படி 4 சென்ட் நிலம் உள்ளது என கூறுவது தவறு என்றும், மேற்படி 4 சென்ட் நிலமானது புல எண்.153 ல் உள்ளது என்றால் புல எண்.156 ல் தான் உள்ளது.

10. சர்வே கல்லை மாதம் ஒருமுறை தணிக்கை செய்ய வேண்டும் என்றால் சரிதான். சர்வே கல் இல்லாதது குறித்து கிராம நிர்வாக அலுவலரிடம் அறிக்கை பெற்றேனா என்றால் இல்லை. சர்வே கல் இல்லை என்றால் அரசிதழில் அறிவிப்பு கொடுத்து மேற்படி இடத்தில் சர்வே கல்லை நட வேண்டும் என்றால் அந்தந்த சொத்திற்கு அதன் உரிமையாளர்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் சர்வே கல் நட வேண்டும் என மனு கொடுக்க வேண்டும். பிரதிவாதி அவ்வாறு மனு கொடுத்துள்ளாரா என்றால் தெரியாது. புல எண்.153 காலையில் தென்புறமாக, மனுதாரர் / பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ள சொத்துக்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் ஆவண எண் குறிப்பிடவில்லை.

**<u>வா.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

முதல் விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur